13.02.2026

O.S.No. 250/2022

PW1–யாகப்பன் – த/பெ. சூசை மரியான்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 13.02.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( பிரதிவாதி தரப்பில்)

1. நான் கூலிவேலை செய்துவருகிறேன். நான் வழக்கு தபசிலை 2002ம் ஆண்டில் கிரையம் வாங்கினேன் என்றால் சரிதான். 1ம் அயிட்ட சொத்து கிரையம் வாங்கிய காலத்தில் தபசில் சொத்தில் வீடு இருந்தது என்றால் சரிதான். எனது வீட்டிற்கு தெற்குபக்கம் பஞ்சாயத்து பொதுகிணறு உள்ளது என்றால் சரிதான். அதற்கு தெற்கே பஞ்சாயத்து மின்மோட்டார் ரூம் உள்ளது என்றால் சரிதான். மேற்படி கிணறு எப்போது வெட்டப்பட்டது என்றால் வெட்டப்பட்டது தெரியும், ஆனால் ஆண்டு தெரியாது.

2. பஞ்சாயத்து கிணற்றை சுற்றி வட்டம் எப்போது அமைக்கப்பட்டது என்றால் கிணறு கட்டும் காலத்திலே அமைக்கப்பட்டது. வீட்டிற்கு பின்புறமுள்ள மாட்டுத்தொழுவம் வீடு வாங்கியபின்பு தான் அமைக்கப்பட்டது என்றால் சரிதான். மாட்டுத்தொழுவம் அரசு புறம்போக்குநிலத்தில் உள்ளது என்றால் சரிதான்.

3. நான் வீடு கட்டியுள்ள இடத்தோடு எனது இடத்தின் எல்கை முடிந்துவிட்டது என்றால் சரிதான். அதற்கு தென்புறத்தில்தான் பஞ்சாயத்துஇடம் உள்ளது என்றால் சரிதான். எனது சொத்துவிவரத்தில் பழைய சர்வே எண் குறிப்பிட்டுள்ளேன், புதிய சர்வே எண்

குறிப்பிடவில்லை என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. புதிய சர்வே எண்ணை தாக்கல் செய்யாததால் என் வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் ஒருபோதும் எனக்கு பாத்தியப்பட்ட 2ம் தபசில் சொத்தை ஆக்கிரமிப்பு செய்ததில்லை என்றால் சரியல்ல. 2ம் தபசில் சொத்தில் அமைந்துள்ள மின்மோட்டர் அறையை கழித்து அளவீடுகள் மேற்கொண்டு அதன் அடிப்படையில் தாவா வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். எனது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

4. பிரதிவாதிகள் அவருக்கு பாத்தியப்பட்ட இடத்தில்தான் கட்டுமானம் கட்டி அஸ்திவாரம் அமைத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. எனவே எனது வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி